**OS.12/2023**

**நாள்.** 28.07.2026.

**பி.வா.சா. 1 – சரவணன்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சைவசித்தாந்த பெருமன்றம் பதிவு செய்யப்பட்ட டிரஸ்ட் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்றால் சைவசித்தாந்தத்தை பரப்புவது. டிரஸ்ட் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருகின்றதா என்றால் ஆமாம். 1987ம் ஆண்டு சைவசித்தாந்த பெருமன்றம் என பெயர் மாற்றப்பட்டது என்றால் சரிதான். சைவசித்தாந்த பெருமன்ற டிரஸ்டின் நோக்கம் சைவசித்தாந்த கொள்கைகளை அதன் தோத்திர, சாஸ்திர நூல்களை பரப்புவது என்றால் சரிதான். 1987ம் ஆண்டிலிருந்து எத்தனை மாநாடுகள் நடத்தியிருக்கிறோம் என்றால் கொரோனா காலங்களை தவிர மற்ற காலங்களில் தொடர்ந்து மாநாடுகள் நடத்தி வருகிறோம். கடைசியாக எங்கு மாநாடு நடத்தினோம் என்றால் சிதம்பரம் அருகில் உள்ள பின்னத்தூரில். மாநாடுகளை ஒரே ஊரில்நடத்துவோ அல்லது வெவ்வேறு இடங்களில் நடத்துவோமா என்றால் வெவ்வேறு இடங்களில் நடத்துவோம். சைவ பெருமக்கள் கிளைகளை தொடங்கியுள்ளோமா என்றால் நான் தலைவராக வந்த பிறகு தொடங்கவில்லை. நான் எந்த வருடம் தலைவராக வந்தேன் என்றால் 2015 –2016. அதற்கு முன்பு இலங்கை மற்றும் தஞ்சாவூரில் கிளைகள் தொடங்கப்பட்டது. அதற்குண்டான ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியும். சைவ பெருமன்றத்தில் சார்பில் இதுநாள் வரை 100க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளோம். அந்த நூல்கள் அனைத்தும் சைவ சித்தாந்தம் சம்மந்தப்பட்ட நூல்கள் என்றால் தமிழ் இலக்கியம் சம்மந்தப்பட்ட நூல்களும் உள்ளது. சைவ சித்தாந்த பெருமன்றத்தின் கோட்பாட்டின்படி இலவசமாக நூல்கள் வழங்கும் விதத்தில்

நூல்நிலையம் அமைத்தோமா என்றால் சென்னை மைலாப்பூரில் அமைத்துள்ளோம். அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். எங்களுடைய பெருமன்றத்தின் நோக்கத்தின் படி சித்தாந்தம் என்ற மாத இதழை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நடத்தவேண்டும் என்று உள்ளது. அதன் படி மாத இதழ் நடத்தி வருகிறோமா என்றால் 2019ம் ஆண்டு முன்பு வரை நடத்தி வந்தோம், அது சம்மந்தமான ஆவணங்கள் எங்களிடம் உள்ளது, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம். எங்களது பெருமன்றத்தில் நோக்கத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் சைவ நெறிகாவலர் என்ற அடிப்படையில் விருதும், பாராட்டும் வழங்கும் விதத்தில் சென்ற மாநாட்டில் யாருக்கு வழங்கியுள்ளோம் என்றால் சிதம்பரத்தில் இரண்டு நபர்களுக்கு கொடுத்தோம், பெயர் ஞாபகமில்லை. அதேபோல் ஒவ்வொருமுறை மாநாடு நடத்தும்போதும் சைவநெறிகாவலர் என்ற பெயரில் விருதும், பாராட்டும் தனித்தனியாக வழங்கி வந்துள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் யார்யாருக்கு விருது கொடுத்துள்ளோம், எதன் அடிப்படையில் விருது கொடுத்துள்ளோம் என்பதற்கு ஆவணம் எங்களிடம் உள்ளது, அது தேவைப்படும் என்றால் தாக்கல் செய்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் சைவசித்தாந்த காவலர், சைவசித்தாந்த பெருமன்ற காவலர் என்ற பெயரில் விருதை நாங்கள் வழங்கி வருகிறோமா என்றால் ஆமாம். இதுவரை சுமாராக 100க்கும் மேற்பட்ட நபர்களுக்கு விருது கொடுத்துள்ளோமா என்றால் நான் தலைவராக பதவியேற்ற பிறகு 10 நபர்களுக்கு விருது வழங்கியுள்ளேன். இந்த நபர்கள் அனைரும் சைவசித்தாந்த கொள்கைகளை பரப்பக்கூடியவர்கள் என்றால் சரிதான். சைவசித்தாந்த கொள்கை என்னவென்றால் சிவனையும், முருகனையும் பரம்பொருளாகக்கொண்டு முப்பொருள்களை விளக்குவது ஆகும். மேற்படி 10 நபர்கள் சைவசித்தாந்த கொள்கைகளை பரப்பியதற்காக அவர்கள் பெயரில் கல்வி ஆராய்ச்சி நிலையம் எதுவும் தொடங்க நடவடிக்கை செய்தோமா என்றால் சமகாலத்தில் இருப்பவர்கள் பெயரில் தொடங்குவதில்லை.

1905ம் ஆண்டு முதல் தான் தலைவராக பொறுப்பேற்ற வரை சைவசித்தாந்த கொள்கைகளை பரப்பி இறந்துபோனவர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு பேர் இருப்பார்கள் என்றால் சுமார் 100 பேருக்கும்மேல் இருப்பார்கள். அவர்கள் யார் பெயரிலும் நாங்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கவில்லை. எங்களுடைய டிரஸ்ட் மற்றும் சைவசித்தாந்த பெருமன்றத்தின் நோக்கங்களில் கல்வி ஆராய்ச்சி மையம் அமைப்பது ஒரு நோக்கம் கிடையாது என்றால் சரிதான். பழனி அடிவாரத்தில் முருகன் அருளை பரப்பக்கூடிய நிறைய சித்தர்கள் இருந்து மறைந்துள்ளார்கள் என்றால் பாம்பன் சுவாமிகளை அவர்கள் யாரும் கொள்கையை பரப்பவில்லை. சைவசித்தாந்தத்தின் கொள்கையும், முருகப்பெருமானின் கோட்பாடும் வேறுபாடு உள்ளது என்றால் அவ்வாறு வேறுபாடு இல்லை. பாம்பன் சுவாமி கோவில் நிர்வாகத்தில் தற்போது வாதி நடத்தி வருகிறார் என்றால் அவர் நிர்வாகத்தில் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எங்களது தரப்பில் வாதியின் குடும்ப டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட பாம்பன் சுவாமிகள் ஆலயத்தில் செயல்பாடுகளில், அன்னதானத்தில் எந்தவித குறுக்கீடும் செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளோம். பாம்பன் சுவாமிகள் சமாதி சென்னை பெசன்ட் நகரில் உள்ளது. மேற்படி இரண்டு இடங்களை தவிர்த்து பாம்பன் சுவாமிகள் சம்மந்தப்பட்ட ஆலயம் உள்ளதா என்றால் பின்னத்தூர், குயவன்பேட்டை ஆகிய இடங்களில் உள்ளது. டிரஸ்ட் நடத்துவதற்கு வருமானம் எந்த வகையில் எங்களுக்கு கிடைக்கிறது என்றால் டிரஸ்டுகள் மூலம் கிடைக்கிறது. எங்கள் டிரஸ்ட்டில் தற்போது மொத்த தொகை எவ்வளவு உள்ளது என்றால் சுமார் ரூ.50 இலட்சம் உள்ளது. அனைத்தும் டெபாசிட்டில் உள்ளது. அதுபோக சென்னை பாரிமுனையில் ஒரு இடம் உள்ளது. மேற்படி வாடகை மற்றும் டெபாசிட் தொகையின் வட்டிப்பணம் தவிர்த்து வேறு வருமானம் கிடையாது. சைவசித்தாந்த பெருமன்றம் பிரப்பன்வலசையில்நடத்துவதற்கு நான் எவ்வளவு தொகை கொடுத்து இடம் வாங்கினேன் என்றால் ரூ.90,100/ பிரப்பன் வலசையில் கல்வி ஆராய்ச்சி

நிலையம் நடத்துவதற்கு நாங்கள் எவ்வளவு தொகை கட்டுமானம் கட்டுவதற்கு நிர்ணயித்துள்ளோம் என்றால் ரூ.20 இலட்சம். பாம்பன் சுவாமிகள் பெயரில் டிரஸ்ட் ஆரம்பித்தால் இராமநாதபுரம் பகுதியில் உள்ளவர்கள் அதிகமாக நன்கொடைகள் கொடுப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் இதுநாள் பாம்பன் சுவாமிகள் பெயரில் வசூல் செய்தது இல்லை என்றால் சரிதான். இனிமேலும் பாம்பன் சுவாமிகள் பெயரில் வசூல் செய்ய மாட்டோம். நாங்கள் கிரையம் வாங்கியுள்ள இடம் பாம்பன் சுவாமிகள் ஆலயத்திற்கு எதிர்புறம் உள்ளது. அவ்வாறு நாங்கள் மேற்படி இடத்தில் பாம்பன் சுவாமிகள் கல்வி ஆராய்ச்சி மையம் ஆரம்பித்தால் பொதுமக்கள் பார்வையில் அது பாம்பன் சுவாமிகள் கோவிலுடன் சேர்ந்த அமைப்பாகவே அறியப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் டிரஸ்ட் விதிமுறைகளுக்கு விரோதமாக பாம்பன் சுவாமிகள் பெயரில் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க முயற்சித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாம்பன் சுவாமிகள் பெயரில் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்கு டிரஸ்ட் விதிமுறைகள்படி எங்களுக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றும், அதனால் வாதியின் வழக்குரையில் கோரியுள்ளபடி தீர்ப்பு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.